PlanetRead

Literacy for a Billion

Movie: Ajantha
Year:

Song: Yarum Thodatha
Lyricist:

யாரும் தொடாத ஒன்றை
ஏதோ முதல்முறை தொடுகிறது
என்னுள் இல்லாத ஒன்றை
எதுவோ எனக்குள் தருகிறது
அம்மம்மம்மம்மா என்னுள் என்ன
ஆனந்தமாய் மின்னல் மின்ன
தேடி வந்தேன் ஓஹோ
கவிதை கண்களோடு
நாடி வந்தேன் நான்
நதியின் கால்களோடு
நதியின் கால்களோடு
யாரும் தொடாத ஒன்றை
ஏதோ முதல்முறை தொடுகிறது
என்னுள் இல்லாத ஒன்றை
எதுவோ எனக்குள் தருகிறது

சிலுசிலு நதியலை வந்து
என்னை செல்லமாக தொடுதே
அதுவரை சுகம் பெறவில்லை
உயிர் தீயை தீண்டிவிடுதே
இரவினில் பகலொன்று வருதே
என் நினைவில் கனவு விழுதே
உறங்கவும் விழிக்கவும் மறந்து
என் உலகம் சுழலுகிறதே
பூமியின் மேலே
இல்லை எந்தன் பாதம்
கைக்கெட்டும் தூரத்தில்
வர்ண மேகம்
காகிதம் காகிதம் ஒன்று
நல்ல ஓவியமானது இன்று
மின்மினி மின்மினி ஒன்று
புது பவுர்ணமி ஆனது இன்று
என்ன மாயம் ஓஹோ
மனதை திறந்து வைத்தேன்
வயதை பூட்டி வைத்தேன்

யாரும் தொடாத ஒன்றை
ஏதோ முதல்முறை தொடுகிறது
என்னுள் இல்லாத ஒன்றை
எதுவோ எனக்குள் தருகிறது

பனித்துளி பனித்துளிக்குள்ளே
நான் மூழ்கி போனதென்ன
பறவையின் சிறகுகள் மோதி
நான் மேகமானதென்ன
இதயத்தை இதயத்தை மெதுவாய்
சுற்றி நெருப்பு பந்து உருள
இலவச இணைபோல் அதுவாய்
சில இம்சை ஒன்று பரவ
யாரங்கே சொல்
எந்தன் நெஞ்சுக்குள்ளே
சொல்லாமல் சென்றாயே
சுவாசம் போலே
ஐக்கியமானது கொஞ்சம்
அட பைத்தியமானது கொஞ்சம்
சொன்னது சொன்னது கொஞ்சம்
இன்னும் சொல்ட ஏங்குது நெ
ஞ்சம்
நீயும் நானும் ஓஹோ
நடக்கும் புதிய காற்று
தெறிக்கும் இசையின் ஊற்று
யாரும் தொடாத ஒன்றை
ஏதோ முதல்முறை தொடுகிறது
என்னுள் இல்லாத ஒன்றை
எதுவோ எனக்குள் தருகிறது
அம்மம்மம்மம்மா என்னுள் என்ன
ஆனந்தமாய் மின்னல் மின்ன
தேடி வந்தேன் ஓஹோ
கவிதை கண்களோடு
நாடி வந்தேன் ஓஹோ
நதியின் கால்களோடு

Literacy for a Billion

நதியின் கால்களோடு

யாரும் தொடாத ஒன்றை

ஏதோ முதல்முறை தொடுகிறது
என்னுள் இல்லாத ஒன்றை
எதுவோ எனக்குள் தருகிறது

*Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.*

*PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.*